நவம்பர் – 23

TNPSC துளிகள்


- பழைய மகாபலிபுரம் சாலையில் (OMR) உள்ள சென்னை செம்மஞ்சேரியில் 124.31 ஏக்கர் பரப்பளவில் ஒலிம்பிக் நகரத்தையும், ஐந்து இடங்களில் விளையாட்டு சிறப்பு மையங்களையும் அமைப்பதற்கான திட்டங்களை தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது.
  - சென்னை, திருவண்ணாமலை, கோயம்புத்தூர், நாகப்பட்டினம் மற்றும் பரமக்குடி ஆகிய ஐந்து இடங்களில் மொத்தம் 64.5 ஏக்கர் பரப்பளவில் இவை அமைக்கப்பட உள்ளன.
- மகாராஷ்டிராவில் உள்ள லட்கர், குஹாகர் மற்றும் ஶ்ரீவர்தன் கடற்கரைகள் 2026–27 ஆம் ஆண்டிற்கான சர்வதேச நீலக் கொடி (Blue Flag) அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன, இது இத்திட்டத்தின் கீழ் அம்மாநிலத்திற்குக் கிடைத்த முதல் அங்கீகாரமாகும்.
  - லட்கர் மற்றும் குஹாகர் கடற்கரைகள் ரத்னகிரி மாவட்டத்திலும், ஶ்ரீவர்தன் கடற்கரை ராய்காட் மாவட்டத்திலும் அமைந்துள்ளன.
- மத்திய உள்துறை அமைச்சகம் (MHA) இந்தியாவின் முக்கிய விசா பிரிவுகளை 13-லிருந்து 9 ஆகவும், துணைப் பிரிவுகளை 49-லிருந்து 23 ஆகவும் குறைத்துள்ளது, மேலும் திருத்தப்பட்ட இந்த நடைமுறை 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் செயல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- எரிசக்தி மற்றும் தூய்மையான காற்று ஆராய்ச்சி மையத்தின் (CREA) ஆய்வின்படி, 2026 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இந்தியாவின் ரஷ்ய புதைபடிவ எரிபொருள் இறக்குமதி சாதனை அளவாக €6.4 பில்லியனை எட்டியுள்ளது.
  - ரஷ்ய புதைபடிவ எரிபொருட்களை வாங்கும் நாடுகளில் சீனாவிற்கு அடுத்த படியாக இந்தியா இரண்டாவது பெரிய நாடாக உள்ளது, இதில் கச்சா எண்ணெய் இறக்குமதி 91% (€5.8 பில்லியன்) ஆகும்.
- குழந்தைகள் மீதான பாலியல் சுரண்டல், துஷ்பிரயோகம் மற்றும் வன்முறை ஆகியவற்றைத் தடுப்பதற்கும் அதிலிருந்து மீள்வதற்கும் ஆன உலக தினம், குழந்தை பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தடுக்கவும், குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்கவும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களின் மீட்சிக்கு ஆதரவளிக்கவும் ஆண்டுதோறும் நவம்பர் 18 அன்று அனுசரிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Ethical media reporting on sexual violence against children" என்பதாகும்.

தமிழ்நாட்டுச் செய்திகள்

தமிழ்நாடு இரத்த தான முன்னெடுப்பு


- தமிழ்நாடு மாநில இரத்தப் பரிமாற்றக் கழகத்தின் (TNSBTC) கீழ் அரிய வகை இரத்தக் குழுக்களைக் கொண்ட தன்னார்வ இரத்த தானம் செய்பவர்களின் மாநில அளவிலான இணையவழி பதிவேட்டை நிறுவுவதற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- அவசர காலங்களில் பொருத்தமான இரத்தம் சரியான நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, அரிய வகை இரத்தக் குழுக்களைக் கொண்ட தன்னார்வ இரத்த தானம் செய்பவர்களின் மாநில அளவிலான தரவுத்தளத்தை இப்பதிவேடு பராமரித்து தொடர்ந்து புதுப்பிக்கும்.

- தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உரிமம் பெற்ற இரத்த மையங்களும் தகுதியான இரத்த தானம் செய்பவர்களைக் கண்டறிந்து, அவர்களின் சம்மதத்துடன் பதிவு செய்வதை எளிதாக்கும்.
- இரத்த தானம் செய்பவர்களின் பதிவு, சரிபார்ப்பு, புதுப்பித்தல் மற்றும் தரவுத் தளத்தின் ரகசியத்தன்மை ஆகியவற்றை TNSBTC மேற்பார்வையிடும்.
- செயல்பாட்டில் உள்ள செஞ்சுருள் சங்கங்களைக் (RRCs) கொண்ட கல்லூரிகளில் இரத்த தான சங்கங்களை அமைப்பதற்கும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



தேசியச் செய்திகள்

கோதுமை சாகுபடி பரப்பளவு குறைப்பு



- 2026–27 ராபி பருவத்தில் இந்தியாவின் கோதுமை விதைப்பு பரப்பளவு முந்தைய பருவத்தின் சாதனை அளவை விட சுமார் 6% குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- கோதுமை சாகுபடி பரப்பளவு 33.6 மில்லியன் ஹெக்டேரிலிருந்து 31.58 மில்லியன்

ஹெக்டேராகக் குறையும் என கணிக்கப்பட்டுள்ளது, இது 2000–01 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஏற்பட்ட மிகக் கடுமையான சரிவாகும்.

- 2026 ஆம் ஆண்டு நவம்பர் 13 நிலவரப்படி, சுமார் 5 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவில் கோதுமை விதைக்கப்பட்டுள்ளது, இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தை விட 15.3% குறைவாகும்.
- குறைந்த பருவமழை காரணமாக நீர் இருப்பு குறைந்ததால், சில விவசாயிகள் கொண்டைக் கடலை மற்றும் கடுகு போன்ற குறைந்த நீர் தேவைப்படும் பயிர்களுக்கு மாறியுள்ளனர்.
- 2026–27 சந்தைப்படுத்தல் பருவத்திற்கான கோதுமையின் குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) அரசு 1% உயர்த்தி குவிண்டாலுக்கு ₹2,610 ஆக நிர்ணயித்துள்ளது.
- வேளாண் செலவுகள் மற்றும் விலைகள் ஆணையம் (CACP) குறைந்தபட்ச ஆதரவு விலை விகிதங்களைப் பரிந்துரைக்கிறது, அதே சமயம் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு (CCEA) இறுதி முடிவை எடுக்கிறது.

மாலுமிகள் பாதுகாப்பு முன்னெடுப்பு



- பிலிப்பைன்ஸின் மணிலாவில் நடைபெற்ற 21வது கிழக்கு ஆசிய உச்சி மாநாட்டின் போது பிரதமர் நரேந்திர மோடி மாலுமிகள் பாதுகாப்பு முன்னெடுப்பை அறிவித்தார்.
- ஆசியான்–இந்தியா கடல்சார் திட்டம் - கடலோரக் காவல் ஒத்துழைப்பு, கடல்சார் கள விழிப்புணர்வு, பேரிடர் மேலாண்மை மற்றும் கடல்வழி இணைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு நீண்டகால இருதரப்பு கடல்சார் கட்டமைப்பை இந்தியா முன் மொழிந்தது.
- இணையப் பாதுகாப்பு மற்றும் குற்றம் - எல்லை தாண்டிய இணையவழி மோசடி மற்றும் டிஜிட்டல் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்காக, இந்தியாவின் தேசிய தடயவியல் அறிவியல் பல்கலைக்கழகத்தில் கிழக்கு ஆசிய உச்சிமாநாட்டின் இணையக் குற்ற மாநாட்டை நடத்த பிரதமர் மோடி முன்மொழிந்தார்.
- லோத்தலில் கிழக்கு ஆசிய உச்சிமாநாட்டின் கடல்சார் பாரம்பரிய விழாவை ஏற்பாடு செய்வதற்கும், நாளந்தா பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழகத் தலைவர்களின் கிழக்கு ஆசிய உச்சிமாநாட்டு வலையமைப்பை நிறுவுவதற்கும் இந்தியா

திட்டங்களை அறிவித்தது.

- மணிலாவில் நடைபெற்ற ஆசியான் உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக கிழக்கு ஆசிய உச்சி மாநாடு நடைபெற்றது.
- 320,000க்கும் மேற்பட்ட மாலுமிகளைக் கொண்டு, பிலிப்பைன்ஸுக்கு அடுத்தபடியாக, உலகின் இரண்டாவது பெரிய கடல்சார் தொழிலாளர் வழங்குநராக இந்தியா உள்ளது.
- கிழக்கு ஆசிய உச்சிமாநாடு என்பது ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பு மற்றும் தற்காப்பு தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்வதற்கான முதன்மையான மன்றமாகும்.
- 2005-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதிலிருந்து, இது கிழக்கு ஆசியாவின் உத்திசார், புவிசார் அரசியல் மற்றும் பொருளாதாரப் பரிணாம வளர்ச்சியில் ஒரு முக்கியப் பங்கை ஆற்றியுள்ளது.
- 11 ஆசியான் உறுப்பு நாடுகளைத் தவிர, கிழக்கு ஆசிய உச்சிமாநாட்டில் இந்தியா, சீனா, ஜப்பான், கொரியக் குடியரசு, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளும் அடங்கும்.

சர்வதேசச் செய்திகள்

வளைகுடா இராணுவ ஒத்துழைப்பு



- வளைகுடா ஒத்துழைப்பு சபையின் (GCC) ஆறு உறுப்பு நாடுகளும் குவைத்தில் தங்களது ஒருங்கிணைந்த இராணுவக் கட்டளைக்கான மேம்பட்ட தலைமையகத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளன.
- வளைகுடா நாடுகளிடையே பொருளாதார, அரசியல், பாதுகாப்பு மற்றும் இராணுவ ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக 1981 ஆம் ஆண்டு மே 25 அன்று ஐக்கிய அரபு அமீரகத்தின் (UAE) அபுதாபியில் GCC நிறுவப்பட்டது.
- பஹ்ரைன், குவைத், ஓமன், கத்தார், சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (UAE) ஆகியவை இதன் ஆறு உறுப்பு நாடுகளாகும், இதன் தலைமையகம் சவுதி அரேபியாவின் ரியாத்தில் உள்ளது.
- புதிய இராணுவத் தலைமையகம் ரியாத்தை மையமாகக் கொண்ட தற்போதைய

ஒருங்கிணைந்த இராணுவ கட்டளையின் கீழ் செயல்படும் மற்றும் கூட்டு இராணுவ ஒத்துழைப்பு மற்றும் கூட்டுப் பாதுகாப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- பஹ்ரைனின் மனாமாவில் நடைபெற்ற 23-வது GCC கூட்டுப் பாதுகாப்பு சபைக் கூட்டத்திற்குப் பிறகு இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.
- தீபகற்பக் கேடயப் படை என்பது GCC-யின் கூட்டு இராணுவப் படையாகும், இதில் அதன் ஆறு உறுப்பு நாடுகளின் இராணுவ வீரர்கள் மற்றும் துணைப் பிரிவுகள் அடங்கும்.

பொருளாதாரச் செய்திகள்

உலகின் ஐந்தாவது மிகப்பெரிய பட்டியலிடப்பட்ட பங்குச் சந்தை செயல்பாட்டாளர் - (NSE)

NSE BECOMES WORLD'S FIFTH-LARGEST LISTED EXCHANGE OPERATOR

EXCHANGE OPERATOR	MKT CAP
1. CME Group	$109.6 Billion
2. Intercontinental Exchange	$95.5 Billion
3. Deutsche Boerse	$63.7 Billion
4. London Stock Exchange Group	$60.1 Billion
5. National Stock Exchange Of India (NSE)	$59.3 Billion

- தேசிய பங்குச் சந்தை (NSE) 2026 ஆம் ஆண்டு நவம்பர் 20 அன்று நாஸ்டாக் (Nasdaq) மற்றும் ஹாங்காங் பங்குச் சந்தையை (HKEX) பின்னுக்குத் தள்ளி, சந்தை மூலதனத்தின் அடிப்படையில் உலகின் ஐந்தாவது பெரிய பொதுப் பட்டியலிடப்பட்ட பங்குச் சந்தை நிறுவனமாக மாறியுள்ளது.
- நாஸ்டாக் மற்றும் HKEX ஆகியவை தலா சுமார் $57.7 பில்லியன் சந்தை மூலதனத்தைக் கொண்டுள்ள நிலையில், NSE-யின் சந்தை மூலதனம் சுமார் $59.3 பில்லியனை எட்டியுள்ளது.
- CME குரூப், இன்டர்கான்டினென்டல் எக்ஸ்சேஞ்ச், டாய்ச் போர்ஸ் மற்றும் லண்டன் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் குரூப் ஆகியவை முதல் நான்கு பங்குச் சந்தை நிறுவனங்களாக உள்ளன.
- NSE 1992 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது, 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தால் (SEBI) அங்கீகரிக்கப்பட்டு 1994 ஆம் ஆண்டில் செயல்பாடுகளைத் தொடங்கியது.
- இந்தியாவில் மின்னணு, திரை அடிப்படையிலான வர்த்தகத்தை அறிமுகப்படுத்திய

முதல் பங்குச் சந்தை இதுவாகும்.

- NSE 1996 ஆம் ஆண்டில் நிஃப்டி 50 (NIFTY 50) குறியீட்டை அறிமுகப்படுத்தியது, இது பல்வேறு துறைகளைச் சேர்ந்த 50 பெரிய மற்றும் அதிக பணப்புழக்கம் கொண்ட நிறுவனங்களைக் குறிக்கிறது.
- ஃபியூச்சர்ஸ் இண்டஸ்ட்ரி அசோசியேஷன் (FIA) கூற்றுப்படி, 2025 ஆம் ஆண்டில் வர்த்தக அளவின் அடிப்படையில் உலகின் மிகப்பெரிய நிதி வழித்தோன்றல்கள் பங்குச் சந்தையாக NSE தரவரிசைப்படுத்தப்பட்டது.

அரசின் தங்கப் பத்திர மீட்பு

- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) 2020–21 தொடர் II தங்கப் பத்திரங்களின் (SGBs) முன்கூட்டிய மீட்பு விலையை 2026 ஆம் ஆண்டு நவம்பர் 19 முதல் அமலுக்கு வரும் வகையில் ஒரு கிராமுக்கு ₹13,345 ஆக நிர்ணயித்துள்ளது.
- இந்தப் பத்திரங்கள் முதலில் 2020 ஆம் ஆண்டு மே 19 அன்று நேரடிச் சந்தா தாரர்களுக்கு ஒரு கிராமுக்கு ₹4,590 ஆகவும், இணையவழி சந்தாதாரர்களுக்கு ₹4,540 ஆகவும் வெளியிடப்பட்டன.
- வட்டி வருமானம் நீங்கலாக, நேரடி சந்தாக்கள் மூலம் சுமார் 191% மற்றும் இணைய வழிச் சந்தாக்கள் மூலம் 194% லாபத்தை முதலீட்டாளர்கள் பெற்றுள்ளனர்.
- SGB-கள் என்பவை தங்கத்தின் கிராம்களில் மதிப்பிடப்படும் அரசுப் பத்திரங்களாகும், மேலும் இவை அரையாண்டுக்கு ஒருமுறை செலுத்தப்படும் வகையில் ஆண்டுக்கு 2.5% வட்டி விகிதத்தை வழங்குகின்றன.
- வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, வட்டி செலுத்தும் தேதியில் முன்கூட்டிய மீட்பு அனுமதிக்கப் படுகிறது.




சுற்றுச்சூழல் செய்திகள்

தமிழ்நாட்டின் காட்டு மலர்கள்


- 2026 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்தில் காட்டுச் சூரியகாந்தி மலர்கள் பூத்துக் குலுங்கி சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்துள்ளன.
- உதகமண்டலத்தை (ஊட்டி) எப்பநாடு மற்றும் கல்லட்டியுடன் இணைக்கும் சாலைகளில் இப்பூக்கள் அதிகளவில் காணப்பட்டன.
- சாதாரண சூரியகாந்தி அறிவியல் ரீதியாக ஹெலியாந்தஸ் அன்னூஸ் (Helianthus annuus) என்று அழைக்கப்படுகிறது மற்றும் இது ஆஸ்டெரேசியே (Asteraceae)

குடும்பத்தைச் சேர்ந்தது.

- இளம் சூரியகாந்தி மொட்டுகள் ஹீலியோட்ரோபிசம் (heliotropism) எனப்படும் செயல்முறையின் மூலம் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சூரியனைப் பின்தொடர்கின்றன; முதிர்ந்த பூக்கள் பொதுவாக கிழக்கு நோக்கி இருக்கும்.
- சூரியகாந்தி விதைகளில் நிறைவுறா கொழுப்பு அமிலங்கள் நிறைந்த சமையல் எண்ணெய் உள்ளது மற்றும் இவை உணவாகவும் உட்கொள்ளப்படுகின்றன.
- மாசுபட்ட மண்ணிலிருந்து கன உலோகங்கள் உள்ளிட்ட சில மாசுபடுத்திகளைத் தாவரங்கள் உறிஞ்சும் பைட்டோரெமீடியேஷன் (phytoremediation) எனப்படும் செயல்முறையில் சூரியகாந்திகள் பயன்படுத்தப்படுகின்றன.




உலகப் புவியியல் பாரம்பரியப் பட்டியல் - லோனார் ஏரி



- சர்வதேச புவியியல் அறிவியல் ஒன்றியத்தால் (IUGS) தொகுக்கப்பட்ட மூன்றாவது 100 உலக புவியியல் பாரம்பரியத் தளங்களின் பட்டியலில் மகாராஷ்டிராவின் லோனார் ஏரி சேர்க்கப்பட்டுள்ளது.

- ❖ லோனார் ஏரி மகாராஷ்டிராவின் புல்தானா மாவட்டத்தில் அமைந்துள்ளது மற்றும் சுமார் 50,000 ஆண்டுகளுக்கு முன்பு பசால்ட் பாறையின் மீது விண்கல் மோதியதால் உருவானது.
- ❖ பசால்ட் நிலப்பரப்பில் உருவான உலகின் ஒரே பெரிய உப்பு மற்றும் காரத்தன்மை கொண்ட விண்கல் பள்ளம் ஏரி இதுவாகும்.
- ❖ 2022 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்ட மேகாலயாவின் மாம்லு குகைக்குப் பிறகு இப்பட்டியலில் இடம்பெற்றுள்ள இரண்டாவது இந்தியத் தளம் இதுவாகும்.
- ❖ லோனார் ஒரு ராம்சர் தளமாகவும் (2020) மற்றும் தேசிய புவியியல் பாரம்பரிய நினைவுச்சின்னமாகவும் உள்ளது.

உலகின் மிகப்பெரிய செயற்கைப் பவளப்பாறை



- ❖ வரலாற்றுச் சிறப்புமிக்க எஸ்.எஸ். யுனைடெட் ஸ்டேட்ஸ் என்ற பெருங்கப்பல், உலகின் மிகப்பெரிய செயற்கைப் பவளப்பாறையாக மாறும் நோக்கில், 2026 நவம்பரில் புளோரிடாவிற்கு அருகிலுள்ள மெக்சிகோ வளைகுடாவில் வேண்டுமென்றே மூழ்கடிக்கப் பட்டது.
- ❖ உலகின் அதிவேகப் பயணிகள் கப்பலான இது, நான்கு நாட்களுக்கும் குறைவான நேரத்தில் அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்தது.
- ❖ 1951-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதும், ஆர்.எம்.எஸ். டைட்டானிக்கை விட நீளமானதுமான எஸ்.எஸ். யுனைடெட் ஸ்டேட்ஸ், ஒரு காலத்தில் நான்கு ஜனாதிபதிகளையும், மோனாலிசா ஓவியத்தையும், 20-ஆம் நூற்றாண்டின் பல திரைப்பட நட்சத்திரங்களையும் ஏற்றிச் சென்றது.
- ❖ ஜனாதிபதியாவதற்கு முன்பு, இளம் பில் கிளிண்டன் அட்லாண்டிக்கைக் கடக்க இந்தக் கப்பலைப் பயன்படுத்தினார்.
- ❖ முன்னாள் ஜனாதிபதிகளான ஹாரி ட்ரூமன், டுவைட் ஐசன்ஹோவர் மற்றும் ஜான் கென்னடி ஆகியோரும் இந்தக் கப்பலில் பயணம் செய்தனர்.


அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

உலக எரிசக்தி கண்ணோட்டம் 2026

- ❖ சர்வதேச எரிசக்தி நிறுவனம் (IEA), தனது உலக எரிசக்தி கண்ணோட்டம் 2026

அறிக்கையில், 2035 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய இறுதி ஆற்றல் நுகர்வில் மின்சாரத்தின் பங்கை 35% ஆக உயர்த்தும் இலக்கை ஆதரித்துள்ளது.

- 2050 ஆம் ஆண்டிற்குள் நிகர பூஜ்ஜிய உமிழ்வு (NZE) சூழ்நிலையின் கீழ், மின்சாரத்தின் பங்கு 2025 ஆம் ஆண்டில் 23% ஆக இருப்பதிலிருந்து 2035 ஆம் ஆண்டிற்குள் 35% ஆக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது.
- விரைவான மின்மயமாக்கல் 2035 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய குடும்ப எரிசக்தி கட்டணங்களை 5% குறைக்கவும், 15.6 மில்லியன் கூடுதல் நிகர வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் கூடும்.
- தற்போதைய கொள்கைகள் போதுமானதாக இல்லை, அறிவிக்கப்பட்ட கொள்கைகள் சூழ்நிலையின் (STEPS) கீழ் மின்சாரத்தின் பங்கு 29% ஆகவும், தற்போதைய கொள்கைகள் சூழ்நிலையின் (CPS) கீழ் 28% ஆகவும் மட்டுமே எட்டும் என கணிக்கப் பட்டுள்ளது.
- மின்மயமாக்கலில் ஆண்டு முதலீடு 2035 ஆம் ஆண்டிற்குள் சுமார் $800 பில்லியனாக அதிகரிக்க வேண்டும், இது முந்தைய ஐந்து ஆண்டுகளின் சராசரி முதலீட்டை விட கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகமாகும்.
- தன்னார்வ 35-by-35 உறுதிமொழி COP31 தலைமையால் ஊக்குவிக்கப்படுகிறது; பருவநிலை சமத்துவம் மற்றும் நிதி ஆதரவின் அவசியத்தைக் காரணம் காட்டி இந்தியா இதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை.



முக்கிய தினங்கள்

உலக பாரம்பரிய வாரம் 2026 – நவம்பர் 19/25

- இந்தியாவின் கலாச்சார மற்றும் இயற்கை பாரம்பரியத்தைப் பாதுகாப்பது மற்றும் பராமரிப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த அனுசரிப்பின் நோக்கமாகும்.
- 1972 ஆம் ஆண்டின் யுனெஸ்கோ உலக பாரம்பரிய மாநாட்டிற்கான தனது அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாக இந்தியா உலக பாரம்பரிய வாரத்தைக் கொண்டாடுகிறது.
- இந்த மாநாடு 1972 ஆம் ஆண்டு நவம்பர் 16 அன்று பிரான்சின் பாரிஸில்

ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1975 ஆம் ஆண்டு டிசம்பர் 17 அன்று நடைமுறைக்கு வந்தது.

- இந்தியா 1977 ஆம் ஆண்டு நவம்பர் 14 அன்று இம்மாநாட்டில் கையெழுத்திட்டது.
- 1861 ஆம் ஆண்டில் அலெக்சாண்டர் கன்னிங்காம் என்பவரால் நிறுவப்பட்ட இந்தியத் தொல்லியல் துறை (ASI), இந்தியாவில் உலக பாரம்பரியம் தொடர்பான விவகாரங்களுக்கான முதன்மை முகமையாகும்.
- ASI கலாச்சார அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது மற்றும் மத்திய பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பிற்குப் பொறுப்பாகும்.
- 2026 ஆம் ஆண்டு நிலவரப்படி, 37 கலாச்சார, 7 இயற்கை மற்றும் 1 கலப்பு பாரம்பரியச் சின்னங்கள் என மொத்தமாக இந்தியாவில் 45 யுனெஸ்கோ உலக பாரம்பரியச் சின்னங்கள் உள்ளன.
- யுனெஸ்கோ உலக பாரம்பரியச் சொத்துக்களின் எண்ணிக்கையில் இந்தியா உலகளவில் ஆறாவது இடத்திலும், ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் இரண்டாவது இடத்திலும் உள்ளது.
- 1983 ஆம் ஆண்டில் இந்தியாவின் முதல் நான்கு உலக பாரம்பரியப் பதிவுகள் ஆக்ரா கோட்டை, அஜந்தா குகைகள், எல்லோரா குகைகள் மற்றும் தாஜ்மஹால் ஆகியவை ஆகும்.
- ஒடிசாவின் கொனார்க் சூரியக் கோயில் 1984 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ உலக பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.




இதரச் செய்திகள்

நடன மங்கையின் இடமாற்றம்

- 4500 ஆண்டுகள் பழமையான கலைப்பொருளான மொகஞ்சதாரோவின் நடன மங்கை, நிஜாமின் நகைகள், தக்ஷிலா நகை சேகரிப்பு மற்றும் காந்தார சேகரிப்பு ஆகியவை தேசிய தலைநகரான புது தில்லியில் உள்ள 'யுகயுகீன் பாரத்' அருங்காட்சியகத்தின் முதல் காட்சிக்கூடத்தில் காட்சிப்படுத்தப்பட உள்ளன.
- 'யுகயுகீன் பாரத்' அருங்காட்சியகம், இந்தியாவின் நாகரிகப் பாரம்பரியத்தின் தொடர்ச்சி, பன்முகத்தன்மை மற்றும் செழுமையைப் பறைசாற்றும் ஒரு மைல்கல் நாகரிகக் கண்காட்சியாகக் கருதப்படுகிறது.

- இது கலாச்சார அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டு வருகிறது.
- அரசு அலுவலகங்கள் இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இது வடக்கு மற்றும் தெற்கு தொகுதி கட்டிடங்களில் நிறுவப்பட்டுள்ளது.
- முன்னர் வடக்கு தொகுதியில் உள்துறை அமைச்சகம், நிதி அமைச்சகம் மற்றும் பிற மத்திய அரசு அலுவலகங்களும், தெற்கு தொகுதியில் பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் வெளியுறவு அமைச்சகமும் இயங்கி வந்தன. இவை தற்போது இந்தியா கேட் வளாகத்திற்கு அருகில் புதிதாகக் கட்டப்பட்ட கர்த்தவ்ய பவனுக்கு மாற்றப்பட்டுள்ளன.
- டெல்லியின் புதிய தலைநகரம், 1912 ஆம் ஆண்டு முதல் 1931 ஆம் ஆண்டு வரை சர் எட்வின் லேண்ட்ஸீர் லூட்டியன்ஸ் மற்றும் சர் ஹெர்பர்ட் பேக்கர் ஆகியோரால் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டது. மேலும், வடக்கு பிளாக் மற்றும் தெற்கு பிளாக் ஆகிய இரண்டு பிரம்மாண்டமான கட்டிடங்களும், ராஷ்டிரபதி பவனும் (முன்னர், வைஸ்ராய் மாளிகை) ரைசினா ஹில் வளாகத்தின் மையப் பகுதியாக அமைந்துள்ளன.
- உலகின் எந்தவொரு அருங்காட்சியகத்தையும் விட இது மிகப்பெரிய காட்சிப் பகுதியைக் கொண்டிருக்கும் என்று அரசாங்கம் கூறியுள்ளது.
- மொகஞ்சதாரோவின் நடன மங்கை என்பது சிந்து சமவெளி நாகரிகத்தைச் சேர்ந்த, கி.மு. 2300–1750 காலகட்டத்தைச் சேர்ந்த, 10.5 செ.மீ உயரமுள்ள ஒரு வரலாற்றுக்கு முந்தைய வெண்கலச் சிற்பமாகும்.
- 1926-ஆம் ஆண்டில் தொல்பொருள் ஆய்வாளர் எர்னஸ்ட் மெக்கே என்பவரால் அகழ்வாராய்ச்சி செய்யப்பட்ட இது, புது தில்லியில் உள்ள தேசிய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.
- இது, சிர் பெர்டியூ என்றும் அழைக்கப்படும் மெழுகு வார்ப்பு முறையில் செய்யப்பட்டது. இது மேம்பட்ட வரலாற்றுக்கு முந்தைய உலோக வேலைப்பாட்டைக் காட்டுகிறது.
- நிஜாமின் நகைகள் என்பவை ஹைதராபாத் நிஜாம்களுக்குச் சொந்தமான, விலை உயர்ந்த நகைகளின் புகழ்பெற்ற தொகுப்பாகும்.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★